

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (18.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மக்கள் விடுதலைக் கட்சியின் நிறுவனத் தலைவர் சு.க.முருகவேல்ராஜன் சந்தித்து, தனது மகன் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.11.2025) ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க வளாகத்தில் உள்ள ஒலிம்பிக் அகாடமியில் 28.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஹோம் ஆப் செஸ் அகாடமியை திறந்து வைத்து பயிற்சி ஆட்டம் மேற்கொண்டார். இந்நிகழ்வில் மேயர் ஆர். பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. துணை மேயர் மு. மகேஷ்குமார் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தாம்பரம் மாநகரம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில்

# பாகநிலை முகவர்கள், பாக மின்னனு முகவர், பாக இளைஞர் அணிக் கூட்டம்!

## மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

தாம்பரம், நவ.19-

தாம்பரம் சட்டமன்ற தொகுதி உட்பட்ட பகுதி வாரியாகவும் - ஒன்றியத்திலும் பாக நிலை முகவர்கள் ( BLA-2) பாக மின்னனு முகவர்கள் (BDA) பாக இளைஞர் அணி கூட்டம் இன்று (19-11-2025 புதன் கிழமை) மாலை 4.00 மணிக்கு பெருங்களத்தூர் தெற்கு பகுதி கூட்டம் சேகர் மகால், அதனை தொடர்ந்து பெருங்களத்தூரிலும், மாலை 5.00 மணிக்கு தாம்பரம் கோன் கிருஷ்ணா திருமண மண்டபத்தில் பெருங்களத்தூர் வடக்கு பகுதி கூட்டம், மாலை 6.00 மணிக்கும் அதன் தொடர்சியாக கேம்ப் ரோடு வாசுதேவா திருமண மண்டபத்தில் தாம்பரம் மேற்கு பகுதி கூட்டம் மேற்படி நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் மேயர் பகுதி கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், BLA-2, BDA, BLC, பாக இளைஞர் அணியினர் தவறாமல் கலந்து கொள்ளுமாறும் மேலும் தாம்பரம் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் பரிதி.இளம்சுருதி கலந்துகொள்ள இருக்கின்றனர் ஆகையால் மேலே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைபடி அந்த அந்த பகுதி கழகத்தை சேர்ந்தவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கி றேன் .

தனது அறிக்கையில் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# எழும்பூர் தொகுதி வார்டு எண்.99-இல் நடைபெறும் பணிகள்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. ஆய்வு!

சென்னை, நவ. 19-

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.99-இல், சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகரக் குடிநீர் வழங்கல் வாரியம் சார்பில் நடைபெற்று வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.



புரசைவாக்கம், பொன்னப்பா தெருவில், சென்னை பெருநகரக் குடிநீர் வழங்கல் வாரியத்தின் சார்பில் பழைய கழிவுநீர்க் குழாய்களை அகற்றிவிட்டுப் புதிய, பெரிய விட்டம் கொண்ட கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கப்படும் பணி;

புரசைவாக்கம், லெட்டாங்ஸ் சாலையில் உள்ள சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டிடத்தின் ஒரு பகுதியில் அமுதம் நியாயவிலைக் கடையை இடம் மாற்றுவதற்கு ஏற்ப மாநகராட்சிக் கட்டிடத்தில் சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் மராமத்துப் பணி ஆகியவை குறித்து ஆய்வு செய்த சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், இப்பணிகளை விரைந்து முடிக்குமாறு துறை சார்ந்த அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வின்போது வார்டு எண்.99-ஐச் சேர்ந்த சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் வாரிய அதிகாரிகள் உடனிருந்தனர்.

முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ். குமார், அவைத் தலைவர் வெ.மருதன், தேவநிதி, சரவணன், 58-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆஸ்டின், சிவக்குமார், தனுஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் இவ்வாய்வில் கலந்துகொண்டனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

# கழக விவசாய அணி நிர்வாகிகள் கூட்டம்!

## அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

சென்னை, நவ.19-

நவம்பர் 27 - தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவையொட்டி தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர தலைவர், துணைத் தலைவர்கள் மற்றும்

அமைப்பாளர் -துணை அமைப்பாளர்கள் கூட்டம் நடைபெறுகிறது என தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர தலைவர், துணைத் தலைவர்கள் மற்றும் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம் 21.11.2025 வெள்ளிக்கிழமை, காலை 9.30 மணி அளவில் மதுரை, மாட்டுத்தாவணி-ஒத்தக் கடை மெயின் ரோடு, உத்தங்குடி, முத்தையா நகரில் அமைந்துள்ள ""ஜேஎப்ஏ லக்கி பேலஸ்"" திருமண மகாலில், கழக விவசாய அணித் தலைவர் என். கே.கே.பெரியசாமி அவர்கள் தலைமையில், மதுரை வடக்கு மாவட்டச் செயலாளரும் - பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி - மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி, எம்.எல்.ஏ. - மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் - அமைச்சர் பிடிஆர். பழனிவேல் தியாகராஜன் மற்றும் விவசாய அணி துணைத் தலைவர்கள் இரா. தமிழ்மணி, எஸ்.கே.வேதரத்தினம் - விவசாய அணி இணைச் செயலாளர்கள் எஸ்.அப்துல்காதர், நாகை ஆர்.அருட்செல்வன், கள்ளிப்பட்டி மணி, மா.முத்துராமலிங்கம், பா. செந்தமிழ் செல்வன், எல்.பி.தர்மலிங்கம், குறிஞ்சி என்.சிவகுமார் - விவசாய அணி துணைச் செயலாளர்கள் முதுகுளத்தூர் கே. முருகவேல், ஆர்.டி.ஏ.ஆதிசேஷன், மதுரை ஆர்.கணேசன், கீழப்பாவூர் கு.செல்லப்பா, கிருஷ்ணகிரி டேம் டி.வெங்கடேசன், டி.எம். அரியப்பன், தஞ்சை ஜித்து (எ) ராஜரத்தினம், வி.என். மணி, இராமநாதபுரம் என். நல்லசேதுபதி, திருப்பத்தூர் கே.புருஷோத்தமன், கள்ளக்குறிச்சி த.சித்தார்த்தன், சூடப்பட்டி சுப்பிரமணியன், இராமநாதபுரம் பா. குணசேகரன், வெப்படை ஜி.செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர தலைவர், துணைத் தலைவர்கள் மற்றும் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள் : நவம்பர் 27 - துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் பிறந்த நாள், அணியின் வளர்ச்சி ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு ஏ.கே.எஸ். விஜயன் அறிவித்துள்ளார்.

### தியாகராயர் நகர் மேற்குப் பகுதி

# 132 வது வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## வட்டக் கழகச் செயலாளர் ந.மோ.முரளி அறிக்கை!

சென்னை, நவ.19-

தியாகராயர் நகர் 132 வது வட்டக் கழகச் செயலாளர் ந.மோ.முரளி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த. வேலு வேண்டுகோளுக்கிணங்க தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, தியாகராயர் நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை ஆகியோர் ஆலோசனைக்கிணங்க 132 வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நாளை (20.11.2025 வியாழக்கிழமை) இரவு 8 மணி அளவில் காமராஜர் காலனி 6வது தெரு சி பிளாக் அருகில் வட்ட அவைத் தலைவர் புலியூர்.எம் ராமச்சந்திரன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் தமிழக துணை முதல்வர் சின்னவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது மற்றும் கழக பணிகள் குறித்து ஆலோசனை வழங்கப்படுகிறது.

இந்த கூட்டத்தில் கே. ஏழுமலை, எஸ்.மோகன், கோடம்பாக்கம் மு. சத்தியா ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.

எனவே 132 வது வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



பெருநகர சென்னை மாநகராட்சி கூட்டம் திருவெற்றியூர் மண்டலம் 4 அலுவலகத்தில் மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு. கணேசன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மண்டல அலுவலர் ராஜ்குமார், உதவி செயற் பொறியாளர்கள் திருநாவுக்கரசு,ஹரி, ஆகியோர் முன்னிலை வைத்தனர்.திமுக, கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தை கட்சியைச் சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள் குடிநீர் வாரிய பகுதி பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரிய உயர் அதிகாரிகள் சுகாதாரத் துறை உயர் அதிகாரிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# சேலம் மத்திய மாவட்டக் கழகம் சார்பில் நல உதவிகள் - போட்டிகள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா. இராஜேந்திரன் அறிக்கை !



சேலம், நவ.19-

துணை முதல்வர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி, நவம்பர் 27ஆம் தேதி சேலம் மத்திய மாவட்டம் முழுவதும் நல உதவிகள்-கோலப் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்த தீர்மானிக்கப் பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் கழக செயற்குழு கூட்டம் மாவட்டக் கழகதி.மு.க அலுவலகமான "கலைஞர் மாளிகை"யில் 18.11.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணி அளவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரைப் போல நகைச்சுவை உணர்வும், சிந்தனையாற்றலும் கொண்ட இளந்தலைவர் அவர்கள், கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் போல ஓய்வின்றி உழைத்திடும் உழைப்புக்குச் சொந்தக்காரர். ஒரு கோடிக்கும் மேற்பட்ட கழகத் தோழர்களையும், பல லட்சக்கணக்கான இளைஞர்களையும் அரவணைத்து, தனது தூய அன்பினால் கட்டிப்போடும் பண்பாளர், கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் சிந்தனையை, நிர்வாக ரீதியாக செயலாக்கிக் காட்டும் வல்லமையும் பேராற்றலும் படைத்தவர், கட்சி நிர்வாகத்திலும், ஆட்சி நிர்வாகத்திலும் தலைசிறந்த ஆளுமையோடு பணியாற்றும் மிகச்சிறந்த தலைமை பண்பை பெற்று வளர்ந்து வரும் இளம் தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர், இளம் தலைவர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மக்கள் பணியில் உழைப்பால் முன்களப் பணியாளராகவும், கழகப் பணியாற்றுவதில் முதன்மை தொண்டராகவும் விளங்கி வருகின்றார்கள்.

"திராவிட பயிற்சி பாசறை", "என் உயிரினும் மேலான", "முரசொலி பாசறை" "அறிவுத்திரு விழா" என இளைய தலைமுறையினரை கொள்கை பிடிப்போடும், இலட்சிய வீரர்களாகவும் உருவாக்கிடும், நம் அனைவரின் பெருமைக்குரிய ஒரு இளம் தலைவராக, கழகத்தின் எதிர்காலமாக விளங்கி வருகிறார்கள்.

எளியோர் வாழ்வில் எழுச்சி காண வேண்டும் என அயராது பாடுபட்டு வரும் இளம் தலைவரின் பிறந்தநாள் இளைய தலைமுறையினரும், கழகத்தினரும் கொண்டாடும் எழுச்சி நாளாகும். அவர்தம் பிறந்த நாளான நவம்பர் 27ஆம் நாள் நமது சேலம் மத்திய மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் நலத்திட்ட உதவிகள், மருத்துவ முகாம்கள், மரக்கன்றுகள் நடுதல், பொதுக்கூட்டங்கள் நடத்துதல், ஆண்களுக்கான விளையாட்டு போட்டிகளான மட்டைபந்து, கால்பந்து, கைப்பந்து, இறகுபந்து (Badminton), கூடைபந்து, கபடி, குத்துச்சண்டை, தடகளம், வரிபந்தாட்டம் (Tennis), மிதிவண்டி ஓட்டுதல், கராத்தே, பளுதூக்குதல், யோகா, உடற்கட்டமைப்பு (Body Building), வளைபந்தாட்டம் (Hockey), எறிபந்தாட்டம் (Handball), நெடுஞ்சாலை ஓட்டம் (Marathon), பானை உடைத்தல், வழுக்கு மரம் ஏறுதல், கோ கோ, கயிறு இழுத்தல் போட்டிகளும், பெண்களுக்கு கோலப்போட்டி, கயிறாட்டம் (Skipping), கயிறு இழுத்தல் போட்டி, மிதி வண்டி போட்டி, கோ கோ, இசைநாற்காலி, கோலாட்டம், ஏழுக்கல் போட்டி, சாக்குப்பை நொண்டி விளையாட்டு, ஓவியபோட்டி ஆகிய விளையாட்டுப் போட்டிகளை ஒவ்வொரு பாக அளவிலும் குறைந்தபட்சம் 4 போட்டிகளையாவது நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்குவதோடு, வெற்றி வாய்ப்பை இழந்தவர்களுக்கும் ஆறுதல் பரிசுகளை வழங்கிட வேண்டும், மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளையும் எழுச்சியோடு ஏற்பாடு செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்வதோடு ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மகளிர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, நெசவாளர் அணி, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, வழக்கறிஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சிறுபான்மையினர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பாசறை, வர்த்தக அணி, தொண்டர் அணி, சுற்றுச் சூழல் அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அயலக அணி ஆகிய அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் என அனைத்து நிர்வாகிகளையும், கழகத் தோழர்களையும் இந்த நிகழ்ச்சிகளை இரண்டு மாதகாலத்திற்கு எழுச்சியோடு, உணர்வுபூர்வமாக சிறப்பாக கொண்டாட வேண்டும் என சேலம் மத்திய மாவட்ட தி.மு.க அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

# சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் கால்பந்தாட்டப் போட்டி!

## மீ.வே.கர்ணாகரன் – ஆர்.டி.மதன்குமார் – ஆர்.ரூபேஷ் – கே.தமிழ்வாணன் பங்கேற்பு!

சென்னை, நவ.19-

சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றியம் அலமாதி ஊராட்சியில் வருகின்ற நவம்பர் 27அன்று பிறந்த நாள் காணும் துணை முதல்வர் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் அலமாதி ஆர்.ரூபேஷ் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் அவர்களின் ஆலோசனைபடி ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்திருவொற்றியூர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில் ஒருநாள் எழுவர் கால்பந்தாட்ட போட்டி நடைபெற்றது.

இந்நிகழ்வில் அலமாதி ஊராட்சி மன்ற தலைவர் கே.தமிழ்வாணன் வரவேற்புரையாற்றினார்.

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சோழவரம் ஜெகன், ரெட்ஹில்ஸ் எம். எஸ்.மணிகண்டன், காரனோடை விஜி, சிவசங்கர், ஊராட்சி கிளை கழக செயலாளர்கள் எம்.கீதா ராமன், பி.ரவி, ஜிகேபி.அசோக் சக்கரவர்த்தி, பி.பத்மநாதன், ஆர்.பிரேமா, எம்.ராஜசேகர், பி.தட்சிணாமூர்த்தி, கே.தமிழழகன், எஸ்.பக்கிரி, எஸ்.பி.புருஷோத்தமன், பாஸ்கர், கலைவாணன், வி.சன் சேகர், எம். திலீப் குமார், பிரகாஷ், மதியழகன், எம்.கவின், பி.முகேஷ் போன்றவர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை கிழக்கு மாவட்டம் - அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, அம்பத்தூர் கிழக்கு பகுதி பாக நிலை முகவர்கள் (BLA 2)ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் -மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னைகிழக்குமாவட்டம், அம்பத்தூர்சட்டமன்றதொகுதிக்குட்பட்ட, அம்பத்தூர் கிழக்கு பகுதி, பாக நிலை முகவர்கள் (BLA2) ஆலோசனை கூட்டம், மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில், இன்று 19-11-2025 புதன்கிழமை மாலை நடைபெறுகிறது.

| நாள் | நேரம் | பகுதி | இடம் |
|---|---|---|---|
| 19.11.2025 (புதன்கிழமை) | மாலை 6.00 மணி | அம்பத்தூர் கிழக்கு பகுதி | மீனா மஹால், முருகன் கோவில் தெரு, விவேகானந்தா நகர், கொளத்தூர், சென்னை–99. |

இக்கூட்டத்தில் அம்பத்தூர் கிழக்கு பகுதிக்குட்பட்டமாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர், இந்நாள்/முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், தொகுதி தேர்தல் பார்வையாளர்கள், பகுதிகழகசெயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழகச் செயலாளர்கள் பாக நிலை முகவர்கள் (BLA2) தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
**செயலாளர் – சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.**



அண்ணாநகர் மண்டலம், செனாய் நகர், புல்லா அவென்யூவில் உள்ள சென்னை மகளிர் மேல்நிலைப்பள்ளியில், கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ், இந்தியா விஷன் இன்ஸ்டிடியூட் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் சார்பில் மாணவிகளுக்கு கண் பரிசோதனை மேற்கொண்டு, அதில் 187 மாணவிகளுக்கு கண் கண்ணாடிகளை மாணவியர்களுக்கு மேயர் பிரியா வழங்கினார். உடன் அதிகாரிகள் எச்.ஆர்.கௌஷிக், நிலைக்குழுத் தலைவர் கல்வி த.விசுவநாதன், மண்டலக்குழுத் தலைவர் கூ.பி.ஜெயின், இந்தியா விஷன் இன்ஸ்டிடியூட் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் வினோத் டேனியல் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.